1974 சனவரி 28]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தொழிற்சாலை தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, மீண்டும் மறுபரிசீலனை செய்வதற்கு ஏதாவது தனிக் காரணம் இருக்கிறதா ? அரசாங்கம் அதுபற்றி ஏதாவது ஆட்சேபனை தெரிவித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அண்மையிலே இதுபற்றி நமது அரசுத் தரப்பில் ஒரு கருத்தை வலியுறுத்தியிருக்கிறோம். அனுமதி கொடுத்ததற்குப் பின்னால் மறு பரிசீலனை செய்வது சரியல்ல. அதுவும் அரசாங்கம் ஆரம்பித்த தொழிற்சாலைக்கு இப்படிப்பட்ட நிலை ஏற்படக் கூடாது என்ற கருத்தை வற்புறுத்தியிருக்கிறோம்.

திரு. த. சோனையா : இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிற இடம் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாகும். பிற்படுத்தப்பட்ட பகுதி யாகிய மணலூரில் அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு வற்புறுத்தி, அங்கே அந்தத் தொழிற்சாலையை உடனே ஏற்பாடு செய்வதற்கு அரசு ஏதாவது விசேஷ ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இடத்திலே ஆரம்பிக்கப் கூடாது என்ற கருத்தும் மத்திய அரசினிடம் இருக்கிறது. ஆகவே, இடமும் மறுபரிசீலனை செய்யப்படும்.

சென்னையிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்குக் கடன்

* 198 வின—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973–ம் ஆண்டில், சென்னையிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி சங்கத்துக்கு நூல் வாங்குவதற்கென அரசு கடன் தொகை ரூபாய் 10,000 வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

பீங்கான், மட்பாண்டங்கள் தொழில் பிரிவு.

* 199 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) பீங்கான், மட்பாண்ட தொழிலுக்காக கார்ப்பரேஷன் ஒன்று துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?